# ஈழத்துப் பயணம்

மன்னார் மண்ணின் மடு அன்னைப் பேராலய விழா மிகவும் சிறப்பாக நடை பெற்றது. ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் சிறிய இடமாகிய மடுத் திருத்தலத்தில் திருப் பலிக்காக ஒன்று கூடினர் என்று போலீஸ் தரப்பில் கூறப் பட்டது. கொழும்பு நகர்ப் பேராயர் கர்தினால் மால்கம் ரஞ்சித் தலைமையில் ஏழு ஆயர்களால் விழா நாளான ஆகஸ்ட் மாதம் 15-ஆம் திகதியன்று திருநாள்த் திருப்பலி நிறைவேறியது. யாழ் மறைமாவட்டத்தின் சார்பில், ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சௌந்திரநாயகம் விழாவினில் பங்குபெற்றார்.

விழாவின் போது நற்கருணையின் பின் திருப்பலி சற்றே நிறுத்தப் பட்டு கெலிகாப்டர் ஒன்று பீடத்திற்கு முன் பறந்து சென்றது. படைவீரர்கள் வந்து குவிந்தனர். சிலவினாடிகளுக்குள் இலங்கைப் பிரதமர் ரனில் விக்ரமசிங்க வாகனத்தில் பீடத்திற்கு முன் வந்திறங்கினார். மேடையில் அவரை ஆயர்கள் வரவேற்றனர். "வடக்கே மடு ஆலயம், தெற்கே கதிர் காமம் போன்ற திருத்தலங்கள் இலங்கை மக்கள் அனைவரையும் இன, மதப் பாகுபாடு இன்றி ஒரே குடும்பமாக ஒன்றிணைப்பதைத்தான் ஒரு பெரிய வரப்பிரசாதமாகக் கருதுவதாக கூறிய பிரதமர், அதற்காக இறைவனிடம் தான் என்றும் நன்றிக் கடன் பட்டுளளவனாக இருப்பேன் என்றும் உறுதிமொழி கூறினார். "இலங்கையின் மத, கலாச்சார பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பில் மடுத் திருத் தலத்தின் மேம்பாட்டுக்காக பெரிய ஒரு காசோலையை மன்னார் நகர் ஆயரான எம்மானுவேல் பெர்னான்டோ அவர்கள் கையில் பிரதமர் அளித்தார். அவருக்கு நன்றி கூறிய மன்னார் ஆயர், மேலும் இந்திய அரசாங்கம் மடுத் திருத்தலத்திற்கு வரும் பயணிகளுக்காக, முன்னூறு இல்லங்களைக் கட்டிக் கொடுக்க முன் வந்திருப்பதாகவும், இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் அறிவித்தார்.

இலங்கைத் திருச்சபை தன்னாலான அளவில் புதிய திருச்சபையாக உருமாற்றம் பெற, சிறு சிறுகாரியங்களை முன் வைத்து ஒருசில கட்டுக் கோப்புகளைக் கொண்டு வர முனைகின்றது. அவர்களின் ஒரு சிலமுயற்சிகள் எங்களுக்கு வியப்பைக் கூட அளிக்கலாம். எடுத்துக்காட்டாக, இனிமேல் திருமணங்களில் கூட்டுத் திருப்பலி அனுமதி இல்லை. ஓரே ஒரு குருவானவரை மட்டுமே பீடத்தில் ஏற்றலாம். மற்றகுருக்கள் அனைவரும் மக்களுடன் வாங்கிகளில் உட்கார்ந்து திருப்பலி பார்க்கலாம், முடிந்தால் அவர்களில் ஒருவர் மறையுரை ஆற்றலாம், இன்னொருவர் திருமண உடன்பாட்டை மந்திரிக்கலாம்.

மேலும், கொழும்பு மறைமாவட்டத்தில் திருமணத் தம்பதியர் திருமணத்திற்கானகாசுடன், மேலதிகமாக ஆலயத்திற்கு ஐயாயிரம் ரூபாய் சேர்த்துக் கட்டவேண்டும். தம்பதியர் முப்பது நிமிடங்கள் திருமணத்திற்குத் தாமதமாக வந்தால், திருப்பலியில் பிரசங்கம் நடைபெறாது. நாற்பத்தைந்து நிமிடம் தாமதமாக வந்தால் மேலதிகமாகக் கொடுத்த அந்த ஐயாயிரம் ரூபாயும் சரி. இப்போது வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு இந்த மேலதிகத் தொகையைப் பத்தாயிரம் ரூபாயாகக் கூட்டலாமே என்று சிலர் பேசிக் கொள்கின்றனர்.

நாடு மிக வேகமாக வளர்ச்சியடைவதற்காக, சீனமக்களின் பங்களிப்பு வெள்ளிடை மலையாகத் தென்படுகிறது. எங்கும் சீனர்கள். எங்கும் கட்டடவேலை, புதியதுறைமுகநகர், புதிய சாலைகள். காலை ஆறு மணிக்கு வேலை தொடங்கினால் இரவு ஒன்பது மணிக்குத் தான் வேலையை நிறுத்துகிறார்கள். நாளுக்கு மூன்று பகுதி (shifts) அமைத்து, இருபத்து நான்கு மணிநேரம் விடாமல் வேலைசெய்யும் வேலைத் தளங்களும் உள்ளன. எங்கும் பலமாடிக் கோபுரங்கள் வேகமாக எழுப்புகின்றன.

இன்னுமொரு புதுமை: நூற்றுக்கணக்கான சீன இளைஞர்கள் இலங்கைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். சீனாவில் குடும்பத்துக்கு ஓரே குழந்தை என்றகொள்கையினால் அறுபத்தைந்துமில்லியன் (ஆறரைகோடி) பெண்கள் அங்கு குறைவாக இருக்கின்றனர். ஓரேமேடையில் இருபது சீன-இலங்கைக் கூட்டுத் திருமணங்கள் நடைபெறப் போவதாகக் கூட நாங்கள் கேள்விப் பட்டோம். இலங்கைப் பெண்களை மணம் செய்து கொள்ளும் சீன இளைஞர்கள் இலங்கையிலேயே வாழ விரும்புவதாகவும் இதைப் பற்றி இலங்கை மாமியார்களுக்கு மிகவும் திருப்தி என்றும் கேள்வி.

எம் நாட்டை இறைவன் தன் சித்தத்திற்கேற்ப நேரிய வழியில் நடாத்திச் செல்வார் என்பது எங்கள்நம்பிக்கை. நாட்டின் எதிர் காலத்தை மடு அன்னையின் கையில் ஒப்படைத்து நாங்கள் செபிக்கலாம். சிறந்த வசந்தகாலம் எங்கும் மலர்வதாக!

ஐம்பது ஆண்டுகள் இறைவனின் சேவையை ஆர்வமுடன் முடித்து நன்றிகலந்த உள்ளத்துடன் விழா எடுக்கும் எம் அருட் சகோதரி கார்மல் ஜோன் பிள்ளைஅவர்கள் தொடர்ந்து இறையாசீரால் சீரும் சிறப்பும் பெற வாழ்த்திநிற்கின்றோம்.

கிறிஸ்துவில் அன்புடன்,

***Fr. Tiburtius Fernandez***